**மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்(ஒபக) மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : திரு. சா.மார்ஸ்**

**ந.க.எண்.76 /ஒபக– Sports / 2019, நாள் : 27.01.2020**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – 2019–20 – விளையாட்டுப்போட்டிகள் தினம் (Sports Day – Secondary) நடத்துதல் – சார்பு

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.656/அ1/SS/2019, நாள்.03.10.2019.

-------

பார்வையில் கண்டுள்ள செயல்முறைகளின் படி வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, 2019–20ஆம் நிதியாண்டில் அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலை / நகராட்சி / மாநகராட்சி / நலத்துறை பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவிகளுக்கும் மாவட்ட அளவிலான கீழ்காணும் விளையாட்டுப்போட்டிகள் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது.

| நாள்/நேரம் | இனம் | போட்டிகள் | போட்டிகள் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 30.01.2020 காலை 8.30 மணி | பெண் | கையுந்து பந்து , கபடி, கால்பந்து , கோ–கோ | நேதாஜி விளையாட்டு மைதானம், வேலூர் |
| | | கேரம் , சதுரங்கம் | அனைவருக்கும் கல்வி இயக்ககக் கூட்டரங்கம், காந்தி நகர், காட்பாடி |
| | | இறகுப்பந்து | DP Acadamy, VGRao Nagar, Auxilium Roundana |
| 31.01.2020 காலை 8.30 மணி | ஆண் | கையுந்து பந்து , கபடி, கால்பந்து , கோ–கோ | நேதாஜி விளையாட்டு மைதானம், வேலூர் |
| | | கேரம் , சதுரங்கம் | அனைவருக்கும் கல்வி இயக்ககக் கூட்டரங்கம், காந்தி நகர், காட்பாடி |
| | | இறகுப்பந்து | DP Acadamy, VGRao Nagar, Auxilium Roundana |

1. போட்டியில் பங்கு பெறும் அனைத்து மாணவர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கப்படும்.
2. போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பதக்கங்கள், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்
3. ஒரு மாணவன் ஒரு குழு, ஒரு தனி நபர் போட்டியிலும், மூன்று தடகளப்போட்டியிலும் மற்றும ஏதேனும் ஒரு தொடர் ஓட்டப் போட்டியில் பங்கு கொள்ளலாம்.
4. 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்கள் மட்டும் U-17 பிரிவின் கீழும், 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் U-19 பிரிவின் கீழும் பங்கு பெறுதல் வேண்டும்.
5. குழுப் போட்டியில் இறகுப் பந்து மற்றும் கேரம் ஆகிய இரு விளையாட்டுகளிலும் மாணவர்கள் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் கலந்து கொள்ளலாம்.

மாணவர்களை ஊக்குவித்து பாதுகாப்பான முறையில் போட்டியில் கலந்து கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலை / நகராட்சி / மாநகராட்சி / நலத்துறை பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**30.01.2020 அன்று விளையாட்டு மைதானத்தில் அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலை / நகராட்சி / மாநகராட்சி / நலத்துறை பள்ளிகளும் பங்கேற்பாளர் விவரம் (Entry Form) சமர்ப்பிக்கக் கேட்டுக்கொள்ளலாகிறது.**

இணைப்பில் உள்ள உடற்கல்வி ஆசிரியர் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களை நடுவராக பணியாற்றும் பொருட்டு உரிய காலத்தில் விடுவித்து அனுப்புமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

27.1.20

மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்(ஒபக)
மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர்
வேலூர்–9.

**இணைப்பு**– பட்டியல்

**நகல் :**

1. மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. உதவி திட்ட அலுவலர்(தொடக்கக்கல்வி), ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, வேலூர்
3. மாவட்டக்கல்வி அலுவலர்கள், அரக்கோணம், இராணிப்பேட்டை, வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர்
4. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர்
5. அலுவலக கோப்பிற்கு.